# Hermas, 11.11.11.11

Frances Ridley Havergal, 1871




Courtesy of the Cyber Hymnal (http://www.cyberhymnal.org)

## பாமாலை 131 ”வாழ்க பாக்கிய காலை!”

1. ”வாழ்க பாக்கிய காலை!” என்றும் கூறுவார்

இன்று சத்துரு நாசம்! இன்றே மீட்பின் நாள்;

மாண்டோர் ஜீவன் பெற்றீர், நித்திய தெய்வமாம்

உம்மை சிஷ்டி யாவும் தாழ்ந்து சேவிக்கும்.

**பல்லவி**

”வாழ்க பாக்கிய காலை!” என்றும் கூறுவார்

இன்று சத்துரு நாசம்! இன்றே மீட்பின் நாள்;

2. நீர் எம் மீட்பர், கர்த்தர், ஜீவன் சுகமாம்

நீர் பிதாவின் திவ்விய ஏக சுதனாம்

நரர் சுபாவம் போக்க கிருபை பூண்டீர்

மாந்தர் மீட்படைய மானிடன் ஆனீர்.

3. ஜீவ காரணர் நீர் சாவுக்குட்பட்டீர்

மீட்பின் பலம் காட்ட பாதாளம் சென்றீர்;

‘இன்று மூன்றாம் நாளில் எழுந்திருப்பேன்’

என்று சொன்ன வாக்கை நின்று காருமேன்.

4. பேயால் கட்டுண்டோரின் சிறை நீக்குமே,

வீழ்ந்தோர் யார்க்கும் புனர் ஜீவன் தாருமே;

மாந்தர் யார்க்கும் ஜோதி முகம் காட்டுமே

உமதொளி தந்து எம்மைக் காருமே